# ECHO OF HIS CALL
# அழைப்பின் எதிரொலி

India's National Spiritual Newspaper

(ECHO GROUP)

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Tamil | ₹ 10/-

Vol. XXVII | YEAR OF OUR LORD JESUS CHRIST, NOVEMBER 2022 | No. 11


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்.

**சங்கீதம் 77:1-11**

1. நான் தேவனை நோக்கி என் சத்தத்தை உயர்த்திக் கெஞ்சினேன், என் சத்தத்தைத் தேவனிடத்தில் உயர்த்தினேன், அவர் எனக்குச் செவிகொடுத்தார்.
2. என் ஆபத்துநாளில் ஆண்டவரைத் தேடினேன்; இரவிலும் என் கை தளராமல் விரிக்கப்பட்டிருந்தது; என் ஆத்துமா ஆறுதலடையாமற் போயிற்று.
3. நான் தேவனை நினைத்தபோது அலறினேன்; நான் தியானிக்கும்போது என் ஆவி தொய்ந்துபோயிற்று.
4. நான் தூங்காதபடி என் கண்ணிமைகளைப் பிடித்திருக்கிறீர்; நான் பேச மாட்டாதபடி சஞ்சலப்படுகிறேன்.
5. பூர்வநாட்களையும், ஆதிகாலத்து வருஷங்களையும் சிந்திக்கிறேன்.
6. இராக்காலத்தில் என் சங்கீதத்தை நான் நினைத்து, என் இருதயத்தோடே சம்பாஷித்துக் கொள்ளுகிறேன்; என் ஆவி ஆராய்ச்சி செய்தது.
7. ஆண்டவர் நித்தியகாலமாய்த் தள்ளி விடுவாரோ? இனி ஒருபோதும் தயை செய்யாதிருப்பாரோ?
8. அவருடைய கிருபை முற்றிலும் அற்றுப் போயிற்றோ? வாக்குத்தத்தமானது தலைமுறை தலைமுறைக்கும் ஒழிந்து போயிற்றோ?
9. தேவன் இரக்கஞ்செய்ய மறந்தாரோ? கோபத்தினாலே தமது உருக்கமான இரக்கங்களை அடைத்துக்கொண்டாரோ என்றேன்.
10. அப்பொழுது நான்: இது என் பலவீனம்; ஆனாலும் உன்னதமானவருடைய வலதுகரத்திலுள்ள வருஷங்களை நினைவுகூருவேன்.
11. கர்த்தருடைய செயல்களை நினைவுகூருவேன், உம்முடைய பூர்வ காலத்து அதிசயங்களையே நினைவுகூருவேன்.

# தேவன் உங்களையும் ஆசீர்வதிப்பார்!

## THE LORD WILL BLESS YOU ALSO!

**உன் தகப்பனுடைய தேவனாலே அப்படியாயிற்று, அவர் உனக்குத் துணையாயிருப்பார்; சர்வவல்லவராலே அப்படியாயிற்று, அவர் உயர வானத்திலிருந்து உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், கீழே ஆழத்தில் உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், ஸ்தனங்களுக்கும், கர்ப்பங்களுக்கும் உரிய ஆசீர்வாதங்களினாலும் உன்னை ஆசீர்வதிப்பார்.**

**ஆதியாகமம் 49:25**



**(அழைப்பின் எதிரொலி ஊழியங்களின் 54-ம் ஆண்டு விழாவில் போதகர் எஸ். ஆபிரகாம் அவர்கள் மூலம் தேவன் அளித்த செய்தி)**

நமது முற்பிதாவாகிய யாக்கோபு மரிக்குமுன்பு தனது பன்னிரெண்டு குமாரர்களையும் அழைத்து, அவர்களொவ்வொருவருக்கும் தனித்தனியே அறிவித்த ஆசீர்வாதங்களைக் குறித்து ஆதியாகமம் 49-ல் தேவன் வெளிப்படுத்தியிருக்கிறார்.

யோசேப்பு என்பதற்கு பெருக்கம் என்று பொருளாகும். மேற்குறிப்பிட்ட வசனத்தில் யோசேப்பின் ஆசீர்வாதங்களில் நான்கு விதமான ஆசீர்வாதங்களை நாம் காணலாம்.

(அ) உயரே வானத்திலிருந்து உண்டாகும் வானத்தின் ஆசீர்வாதம்,

(ஆ) கீழே ஆழத்திலிருந்து உண்டாகும் பூமியின் ஆசீர்வாதம்,

(இ) ஓர் தாய் தன் சிறு பிள்ளைக்குப் பால் கொடுத்து வளர்க்கும் ஸ்தனங்களுக்குரிய ஆசீர்வாதம்,

(ஈ) கர்ப்ப வேதனையோடே இருந்தாலும் பிரசவித்து அநேக சந்ததிகளை உருவாக்குகிற கர்ப்பத்திற்குரிய ஆசீர்வாதம்.

## 1. வானத்தின் ஆசீர்வாதம்!

மேலே வானத்திலிருந்து (பரலோகத்திலிருந்து) வருகின்ற ஆசீர்வாதம் மிகவும் மேன்மையானது; முதன்மையானது. தேவபிள்ளைகள் ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்ள வேண்டிய மிக முக்கியமான ஆசீர்வாதம் ஆகும். நம்முடைய முற்பிதாவாகிய ஈசாக்கு தனது பிள்ளையை ஆசீர்வதிக்கும்போது முதலில் வானத்தின் ஆசீர்வாதத்தையே கொடுக்கிறார். **"தேவன் உனக்கு வானத்துப் பனியையும் பூமியின் கொழுமையையும் கொடுத்து, மிகுந்த தானியத்தையும் திராட்சரசத்தையும் தந்தருளுவாராக"** ஆதியாகமம் 27:28 என்று கூறி ஆசீர்வதித்தார். கர்த்தரும், அந்த ஆசீர்வாதத்தின்படியே யாக்கோபுக்கு அனைத்தையும் தந்தருளி ஆசீர்வதித்தார். **ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்.** ஆதியாகமம் 1:1 என்று வானம் முதலில் படைக்கப்பட்டதை வேதம் சுட்டிக்காட்டுகிறது. வானத்திற்கு ஆண்டவர்

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...





### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


**CHIEF EDITOR**
Angeline Selvakumari Henry, M.A., M.Ed.

**MANAGING EDITOR**
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**ADMINISTRATION**
Bro. N. Prakasam, M.A., General Manager

**EDITORIAL BOARD**
Sis. Jesy Veena Sam
Sis. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Rev. Dr. K.R. Rajasekaran
Dr. A. Richard Samuel, M.A., Ph.D.

**EDITOR, PUBLISHER & PRINTER**
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 95661 31858

**CORE LEADERS**
Bro. K. Puratchivendan
Bro. A. Edward Durai
Bro. A. Alvin
Bro. K. Abraham
Sis. Dhanalakshmi Chinnaiah

**E.mail ID**
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

**YOUTUBE CHANNEL**
Echo of His Call


**கர்த்தர் தம்முடைய முகத்தை உன் மேல் பிரசன்னமாக்கி, உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர் என்பதே.**
**– எண்ணாகமம் 6:26.**

*கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே!*

*நமது இரட்சகரும், ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் உங்களை அன்புடன் வாழ்த்துகிறோம்.*

*கர்த்தருடைய மகாப் பெரிய கிருபையால் 2022-ம் ஆண்டு ஏறக்குறைய முடிவுக்கு வந்து விட்டது. உலகம் முழுமையிலும் உள்ள மக்கள் இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் பிறப்பையும், 2023-ம் ஆண்டின் உதயத்தையும் ஆவலுடன் எதிர்பார்த்துப் பல முன் ஆயத்தங்களைச் செய்கிறார்கள். தேவ மக்களாகிய நாம் ஆவிக்குரியப் பிரகாரமாக இந்த நாட்களைத் தீவிரமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஊக்கமான ஜெபத்திலும், உண்மையான ஊழியத்திலும் நம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.*

*ஜெபமும், ஊழியமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவை. ஆனால், அனேகர் இந்த நாட்களில் ஜெபத்திற்கு முக்கியத்துவம் அளிக்காமல் ஊழியம், ஊழியம் என்று அலைகின்றனர். இதனால் ஒரு காலகட்டத்தில் அவர்களுக்கு மனச்சோர்வும், பின்னடைவும் ஏற்படுகிறது.*

*இந்தச் செய்தியை என் கையினால் எழுதும் இந்த நாளில் தேவன் எனக்கு அளித்தச் செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகிறேன்.*

*மக்களோடு உள்ள ஐக்கியம் சிலவேளைகளில் கசப்பான காரியங்களைக் கொண்டுவரும். நாம் பூரண புருஷர்கள் அல்ல. ஆனால் நிறைவுள்ளவர்களாக அனுதினமும் உருமாற்றப்படும் மக்கள். நாம் பரிசுத்த ஆவியானவருக்கு நம்மை திறந்து கொடுத்தால் தேவன் நம்மை சுத்திகரிக்கவும், நம்மை மாற்றவும் மக்களை உபயோகப்படுத்துகிறார். எல்லா இடங்களிலேயும் எந்நேரமும் ஜெபிக்கிற மக்களுக்கு கோபப்படவும், சந்தேகப்படவும் நேரமிருக்காது. ஜெபமின்மையின் அடையாளமாக குறைகூறுதலும், புறணி பேசுதலும் இருக்கும். ஜெபமில்லா மனிதனுடைய வாழ்வில் இவ்விரண்டில் ஒன்று நேரிடும்: சண்டை அல்லது பின்மாற்றம். ஐக்கியத்தில் முளைக்கக்கூடிய எல்லா சவால்களையும், பிரச்சினைகளையும் தெளிவாக அறிந்த பவுல், தீமோத்தேயு இருந்த திருச்சபையிலே ஒரு உறுதியான சட்டத்தை உருவாக்குகிறார். புருஷர்கள் எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ண வேண்டும். ஆதி திருச்சபையில் அப்போஸ்தலர்கள் காரியங்களை கையாண்டபோது ஜெபிக்க நேரம் குறைவாயிருந்த போது அவர்கள் குழப்பங்களையும், அதிருப்தியையும், பிரச்சினை முளைப்பதையும் கண்டார்கள். அவர்கள் உடனே ஜெபக்குறைவே இதற்கு காரணம் என்பதை*



**சென்னையில் உள்ள நமது ஊழியங்களின் முக்கிய ஊழியர்களின் கூடுகை**

**Our Ministries:** ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) ◘ BIBLECOR - Postal Courses (3 languages) ◘ Online Courses ◘ Theological Correspondence Courses (2 languages) ◘ Church Planting ◘ Nehemiah Bible Colleges ◘ Gospel Printing Press ◘ Great Commission Partners ◘ St. Paul's Matriculation School ◘ Crusades ◘ Community Development

*கண்டறிந்தார்கள். ஜெபத்திற்கு உகந்த ஆயத்தங்களைச் செய்தபோது மீண்டும் ஐக்கியத்தின் இனிமை தொடர்ந்தது (அப்போஸ்தலர் 6:4).*

*ஜெபம் தவறும்போது பரிசுத்தமும் தவறுகிறது. எல்லா வகையான பாவங்களும் நுழைகிறது. கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை நுழைந்து, தனி மனிதனுடைய இரட்சிப்பிற்கும், கிறிஸ்துவின் சரீரம் முழுமைக்கும் நாசத்தை விளைவிக்கிறது. அங்கே திருப்தியிருப்பதில்லை. குறை கூறுதல், முறுமுறுத்தல், குற்றம் காணுதல், அவதூறு பண்ணுதல், கடிந்துகொள்ளுதல் வளருகிறது. இவை ஜெபமின்மையின் கசப்பான கனிகள். தர்க்கம், வேதனையுண்டாக்கும் விளைவுகளை கொண்டு வரும். இவை எல்லாம், மக்கள் ஜெபிக்க தவறும்போது உண்டாகும் விளைவு. ஜெபமின்மையின் விளைவால் ஐக்கியம் சாகிறது. ஆவியின் கனியை தோற்றுவிக்கும் ஜீவரத்தம் ஜெபமே.*

## நமது முக்கிய ஊழியர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சி

*சென்னையில் உள்ள நமது ஊழியங்களின் முக்கிய ஊழியர்களின் கூடுகையானது ஐக்கியத்திற்காகவும், ஜெபத்திற்காகவும் 12.09.2022 அன்று மாலை 5.00 மணியளவில் நடத்தப்பட்டது. சுமார் 60 பேர் கலந்து கொண்டனர்.* **சகோதரரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.**

*(1 தெசலோனிக்கேயர் 5:25)*

*தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, ஆமென்!*

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,
**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் & அலெக்ஸ் சாம்சன் சாம்.**
(+91) 98412 71858 / 98410 71858
மின்னஞ்சல் : samselvaraj333@gmail.com

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தார். ஆபிரகாம் கர்த்தர் தனக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தை குறித்து சந்தேகப்பட்டபோது கர்த்தர் அவரை வெளியே அழைத்துச் சென்று வானத்தைக் காட்டினார்.



**அவர் அவரை வெளியே அழைத்து: "நீ வானத்தை அண்ணாந்து பார். நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு" என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி: "உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும்" என்றார்.** ஆதியாகமம் 15:4–5. நம் உலக வாழ்க்கையில் சோர்வு ஏற்படும்போது கர்த்தர் காட்டும் வானத்தின் ஆசீர்வாதத்தினால் நம் துக்கங்கள் சந்தோஷமாக மாறும். இயேசுவினிடத்தில் ஒரு சிறுவன் வந்தான்; அவனிடத்தில் ஐந்து அப்பங்களும், இரண்டு மீன்களும் இருந்தன. இயேசுவின் கரத்திற்கு



அவைகள் வந்தபோது ஐயாயிரம் பேருக்கு மேற்பட்டவர்களின் பசியை அவைகள் போக்கின. சிறுவனின் பசியைப் போக்கக்கூடிய உணவு இத்தனைபேரின் பசியைப் போக்கிய அதிசயம் எவ்வாறு நடந்தது? இயேசு ஆண்டவர் அவற்றை வானத்திற்கு நேரே உயர்த்தி வானத்தின் ஆசீர்வாதத்தைப் பெற்றதினால் அல்லவா! இயேசு தமது ஊழியத்தின்போது அடிக்கடி வானத்தை அண்ணாந்துப் பார்ப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். வானத்தின் ஆசீர்வாதமானது பரலோகத்தின் வல்லமையை மேலிருந்து கீழே பெற்றுத்தருவதாகும். வானத்தின் ஆசீர்வாதத்தின் மகிமையினாலே ஒரு சிறுவனின் பசியை மட்டுமே போக்க போதுமானதாயிருந்த உணவானது பல்லாயிரக்கணக்கான மக்களுடைய பசியை போக்க வல்லமை உள்ளதாக மாறியது.

அதேப்போல் வானத்தின் மகிமையை விளக்கும் மற்றொரு நிகழ்ச்சியையும் பார்ப்போம். இயேசு ஆண்டவரிடம் ஒரு செவிடனை ஜனங்கள் கூட்டி வந்தபோது, இயேசு **தம்முடைய விரல்களை அவன் காதுகளில் வைத்து, உமிழ்ந்து, அவனுடைய நாவைத் தொட்டு; வானத்தை அண்ணார்ந்துபார்த்து, பெருமூச்சு விட்டு: "எப்பத்தா" என்றார்; அதற்குத் திறக்கப்படுவாயாக என்று அர்த்தமாம்.** மாற்கு 7:34. லாசரு வியாதியாயிருக்கும்போது, அவனைக் குணமாக்க இயேசுவை அழைத்தார்கள். ஆனால் இயேசுவோ பிரச்சினையாயிருக்கும் போதும், கடைசியாய் அவன் இறந்த பின்பும்கூட வரவில்லை. அவன் இறந்து நான்கு நாட்கள் கழித்து தாமதமாக வந்து சேர்ந்தார். லாசரு, இயேசுவின் அன்புக்குரிய சிநேகிதனாயிருந்த போதிலும் அவன் உடல் நாற்றமெடுத்த பின்பே வந்தார் என வேதம் சொல்கிறது. **இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து: "பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்"** யோவான் 11:41–42 என்று வானத்தின் ஆசீர்வாதத்தையும், வல்லமையையும் பெற்ற பிறகு "**... லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்**" யோவான் 11:43. இறந்து நான்கு நாட்களாகி நாற்றமெடுக்கும் உடலோடு இருந்த லாசரு உயிரோடு வெளியே வந்தான். இயேசுவுக்கு பிரச்சினை எவ்வளவு பெரியது என்பது பிரச்சினையேயல்ல. ஏனெனில் சர்வ வல்லமை உடைய கர்த்தராகிய அவர், பிரச்சினையை விடப் பெரியவர். கர்த்தரின் வல்லமையை பெற்றுத் தரும் வானத்தின் ஆசீர்வாதம் எனப்படும் பரலோகத்தின் ஆசீர்வாதம், எல்லாப் பிரச்சினைகளையும் விடப் பெரியது. எல்லா வற்றிற்கும் மேலாக உண்மையோடு விசுவாசிக்கின்ற அனைவருக்கும் பரலோகராஜ்யத்தைத் தரவல்லது. **ரெவிதீமிலே ஜனங்கள் மோசேயிடம் தண்ணீர் கேட்டு முறுமுறுத்தபோது, அவர் வானத்தை அண்ணாந்து நோக்கி கர்த்தரைக் கூப்பிடுகிறார்** (யாத்திராகமம் 17:1–4) வானத்தின் ஆசீர்வாதம் மூலம் ஆச்சரியப்படும் விதத்தில் வறண்ட நிலத்தில், **கன்மலையைப் பிளந்தபடி நீருற்று பெருகியது**

(யாத்திராகமம் 17:5–6).

யாக்கோபு பெயர்செபாவை விட்டுப் புறப்பட்டு ஆரானுக்குப் போகும்போது, வீடற்ற நாடோடியாக ஓரிடத்திலே தங்கினான். அங்கு பஞ்சணை இல்லை. கல்லையே தலைக்கு வைத்துக்கொண்டு எதிர்காலம் பற்றி தெரியாதவனாக, கற்றுக்குட்டியாக, வேதனை மிகுந்தவனாக தூங்கினான். **அங்கே அவன் ஒரு சொப்பனங்கண்டான்; இதோ, ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது, அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது, அதிலே தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள்** ஆதியாகமம் 28:12. **அதற்கு மேலாக கர்த்தர் நின்று கொண்டிருந்தார்** (ஆதியாகமம் 28:13).

ஒரு தேவஊழியர் பல வருடங்களாக தன் சேமிப்பு மற்றும் மக்கள் கொடுத்த காணிக்கைகளை எல்லாவற்றையும் சேர்த்து கடும் பிரயாசப்பட்டு தேவனுக்காக 5,000 பேர் அமரக்கூடிய தேவசபையை அமைத்தார். பல கடும்போராட்டங்கள் மத்தியிலே தேவனுக்கு அவர் அமைத்த சபையை ஒரு சில மாதங்களிலே கடும் புயற்காற்று வந்து தரைமட்டமாக்கி விட்டது. கடும் வேதனையோடு கர்த்தரை துதித்தபோது பலர் அவரைப் பரிகாசம் பண்ணினர். இந்த இக்கட்டான சூழ்நிலையில்

சிலர் அவரிடம் வந்து ''ஐயா எங்கள் சபையில் பிரசங்கிக்க வர முடியுமா?'' என்று கேட்டனர். அவர் தன் மனஆறுதலுக்காக அதை ஒப்புக் கொண்டார். தொடர்ந்து சில மாதங்கள் அங்கு அவருடையப் பிரசங்க ஊழியத்தை நிறைவேற்றினார். அங்குள்ள மக்கள் அவர் நடத்திய இடத்தில் தேவ மகிமையை அவர் மூலம் பிரத்தியட்சமாய்க் கண்டதால் ஏராளமான அளவில் மக்கள் பெருகிவரத் தொடங்கினர். ஏராளமான மக்கள் புதுவாழ் வினைப் பெற்றார்கள். ஒருநாள் அவர் இரண்டு இலட்சம் பேர் கூடியிருந்த கூட்டத்தில் அங்குப் பிரசங்கிக்க தொடங்கியபோது கர்த்தரின் மெல்லியக்குரல் தெளிவாய்க் கேட்டதால் பூரிப்படைந்து ஆச்சரியத்தில் அமிழ்ந்திருந்த அந்த தேவஊழியரைப் பார்த்து, தேவன் ''வெறும் 5,000 பேருக்காக மட்டும் நீ தேவைப் படவில்லை. உன்னை இலட்சக்கணக்கான மக்களுக்கு உபயோகப்படுத்தவே உன் முந்தின சபையை நான் அழித்தேன்'' என்றார்.

சுயமாய் பறக்க வேண்டும், வேட்டையாடக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே கர்த்தர் கூட்டை கலைத்தார். யாக்கோபுக்கு சொப்பனத்தில் தெரிந்த ஏணி எது? ஏணியின் மூலமாக ஆண்டவரைக் கண்டானே அந்த ஏணியைப் பற்றி நாம் அறிந்து கொள்ள யோவான் 1:51 ம் வசனத்தைக் காண்போம். **பின்னும், அவர் அவனை நோக்கி: ''வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றார்.** அந்த ஏணி இயேசு கிறிஸ்து என்பதை அறியலாம். உங்களுடைய ஜெபத்தை ஆண்டவரிடம், கொண்டு செல்லவும், ஆண்டவ ரின் செய்தியை உங்களுக்கு கொண்டுவரவும் இயேசு கிறிஸ்து ஏணியாக இருக்கிறார். **அவருடைய தலைமயிர் பஞ்சைப்போல் வெண்மையுடனும், கண்கள் அக்னி ஜுவாலையுடனும், கால்கள் உலைக்களத்தில் உள்ள வெண்கலம் போலவும் உள்ளது. அவர் வலக்கையில் ஏழு நட்சத்திரங்கள் உள்ளன** (வெளிப்படுத்தின விசேஷம் 1:14–16). சூரியனைப்போல முகப்பிரகாசமுள்ள இயேசு கிறிஸ்து ஏணியாகவும், துணையாகவும் இருந்து நம்மை கைவிடாது பாதுகாக்கிறார். யோபு கூறுவதைப் போல **''இதோ, அவர் என் அருகில் போகிறார், நான் அவரைக் காணேன்; அவர் கடந்து போகிறார், நான் அவரை அறியேன்''** யோபு 9:11. அவர் நம்முடனே இருந்து ஆசீர்வா தங்களைத் தருவதற்குத் தயாராக இருக்கும் போது, நாம் அதை அறியாமல் இருக்கிறோம்.

## 2. பூமியின் ஆசீர்வாதம்!

வானத்தின் ஆசீர்வாதத்தை நாம் பெற்றுக் கொள்ளும்போது பூமியின் ஆசீர்வாதத்தையும் சேர்த்தே கர்த்தர் தருகிறார். பூமியின் ஆசீர்வாதம் மிக முக்கியமானது. **சீனாய் மலையில் அவர் மோசேயோடு பேசி**



**முடித்தபின், தேவனுடைய விரலினால் எழுதப்பட்ட கற்பலகைகளாகிய சாட்சியின் இரண்டு பலகைகளை அவனிடத்தில் கொடுத்தார்.** யாத்திராகமம் 31:18. மோசே வானத்தின் ஆசீர்வாதத்தைப் பெற்றபின் பூமிக்குரிய ஆசீர்வாதமாகிய கர்த்தரின் பிரமா ணத்தை கற்பலகையில் சீனாய் மலையிலிருந்து கீழே கொண்டு வந்தார். அந்த பூமியின் ஆசீர்வாதம் ஜனங்களை வழிநடத்தவும், பிள்ளைகளுக்கு வழிகாட்டவும், குடும்பத்தை தாங்கவும் தேவைப்பட்டது. ஆனால் மோசே வரத் தாமதம் ஆனதால் அந்த ஜனங்கள், ஆரோன் மூலமாக பொன்னாலான கன்றுக் குட்டியை வார்த்து அதை வணங்க ஆரம்பித்து விட்டனர். மோசே அதைக் கண்டு துக்கித்து, கோபத்துடன் பூமியின் ஆசீர்வாதமான கற்பல கையை உடைத்துப் போட்டார். வானத்தின் ஆவிக்குரிய வல்லமையை மட்டும் நாம் பெற்றால் போதாது. பூமியின் ஆசீர்வாதமும் வேண்டும். அந்த ஆசீர்வாதமானது வேதனை, மனஅழுத்தம், துன்பங்களை தீர்க்கவல்லது. இவ்வுலக நன்மைகளை பெற்றுத்தர வல்லது. இந்த ஆசீர்வாதமும் கர்த்தருடையதுதான். இதையும் நாம் கண்டிப்பாக பெற்றுக்கொள்ள வேண்டும். அதை நம் மக்களுக்கு, பிள்ளைகளுக்கு, குடும்பத்திற்கு கொடுத்து வழிநடத்த வேண்டும். இந்த ஆசீர்வாதத்தை வாங்கிக் கொள்ளாததால் பல குடும்பங்கள் பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கின்றன. வானத்தின் ஆசீர்வாதம் மட்டும் போதும் என நினைத்து பலர் பூமியின் ஆசீர்வாதத்தை நிராகரித்து கர்த்தர் தந்ததை உடைத்துப் போடுகின்றனர். அதனால் இவ்வுலகில் துயரத்திற்கு ஆளாகின்றனர்.

யோபு தன்னுடைய பூமியின் ஆசீர்வாதமான ஏழாயிரம் ஆடுகளும், மூவா யிரம் ஒட்டகங்களும், ஐந்நூறு ஏர்மாடுகளும், ஐந்நூறு கழுதைகளுமாகிய மிருகஜீவன்களை யும், பிள்ளைகளையும், பணியாட்களையும் ஒரேநாளில் இழந்தார். எதை இழந்தாலும் அதை இரட்டிப்பாக கொடுக்கும் தேவன் என்னோடு இருக்கிறார் என்பதை யோபு அறிந்திருந்தார். அவர் தன்னைக் கைவிடாதவர் என்று விசுவாசித்தார். சாத்தானின் சோதனை காரணமாக பூமியின் ஆசீர்வாதத்தை இழந்தாலும் ஆண்டவர் மீண்டும் அதை இரட்டிப்பாக தருபவர் அல்லவா! **''வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள் களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன்; ... நீ என்னை அறியாதிருந்தும், உனக்கு நாமம் தரித்தேன்''** ஏசாயா 45:4.

**கர்த்தர் மோசேயை நோக்கி: ''முந்தின கற்பலகைகளுக்கு ஒத்த இரண்டு கற்பலகைகளை இழைத்துக் கொள்;**

தொடர்ச்சி 6-ம் பக்கம்.....


# நெகேமியா மாலை நேர வேதாகமக் கல்லூரி

**சேப்பாக்கம் & சந்தோஷபுரம், சென்னை**

போதனா மொழி : தமிழ்

*Registered Candidate for Membership*
Asia Theological Association (ATA)

**உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.**

Certificate in Theology : ஒரு வருடம்
Diploma in Theology : இரண்டு வருடங்கள்

**கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்**
**உடனே அணுகவும் !**

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2022 நவம்பர் 19 முதல் டிசம்பர் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

நவம்பர் 19 ⇨ நமது அஞ்சல்வழி இறையியல் கல்வி மற்றும் தொலைதொடர்பு வேதாகமக்கல்வி முறைகளின் வளர்ச்சிகளுக்காக ...

நவம்பர் 20 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

நவம்பர் 21 ⇨ நமது அச்சகத்திலேயே 16 மொழிகளில் அச்சடிக்கப்பட்டு எல்லா மிஷன் பணித்தளங்களுக்கும் அனுப்பப்படும் சுவிசேஷப் பிரசுரங்களை தேவன் ஆசீர்வதித்து வருவதற்காக ...

நவம்பர் 22 ⇨ நமது அக்டோபர் மாதத்தின் அனைத்துத் தேவைகளையும் சந்தித்ததற்காக...

நவம்பர் 23 ⇨ நமது மருத்துவ ஊழியத்தில் கர்த்தர் நடத்தி வரும் அற்புதங்களுக்காக...

நவம்பர் 24 ⇨ நமது தலைமைச் சபை, கிளைச் சபைகள் மற்றும் அதன் விசுவாசிகளையும், ஊழியர்களையும் ஆசீர்வதித்து வருவதற்காக ...

நவம்பர் 25 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களை ஆசீர்வதித்து வருவதற்காக ...

நவம்பர் 26 ⇨ நமது தலைமைப் போதகரை முழு அர்ப்பணிப்புடன், பன்மொழி ஊழியங்களின் மூலமாக சுவிசேஷத்தினை பிரசங்கித்திட கிருபை பாராட்டி வருகிறதற்காக...

நவம்பர் 27 ⇨ நமது சபைகளின் எழுப்புதலுக்குரிய புதிய விசுவாசிகளை ஆசீர்வதித்ததற்காக....

நவம்பர் 28 ⇨ புதிய பணியாளர்களை தந்து நமது ஊழியங்களை (நிறுவனத்தை) ஆசீர்வதித்து வருவதற்காக...

நவம்பர் 29 ⇨ நமது ஊழியங்களின் ஊழியர்களின் கூடுகை தலைமைச் சபையில் 12.09.2022 அன்று சிறப்பாக நடைபெற்றமைக்காக...

நவம்பர் 30 ⇨ சேப்பாக்கத்திலுள்ள ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளின் ஜெபக்கூட்டம் 30.09.2022 அன்று சிறப்பாக நடைபெற்றமைக்காக...

டிசம்பர் 01 ⇨ நமது அனைத்து பணியாளர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் ஆசீர்வதித்து வருவதற்காக...

டிசம்பர் 02 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** இணை ஆசிரியர்களுக்காகவும் மற்றும் அவர்களது ஈடுபாட்டிற்காகவும்...

டிசம்பர் 03 ⇨ நமது தலைமைச்சபை மற்றும் கிளைச் சபைகளில் நடத்தப்படும் ஞாயிறு ஆராதனை மற்றும் ஊழியங்கள் மூலமாக சந்திக்கப்படாத மக்களிடம் சுவிசேஷம் சென்றடைந்ததற்காக...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

டிசம்பர் 04 ⇨ உலக தேசங்கள் அனைத்தும் ஒற்றுமையாகவும் மற்றும் அமைதியாகவும் வாழ்ந்திட...

டிசம்பர் 05 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின்** ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்காக...

டிசம்பர் 06 ⇨ நமது **அழைப்பின் எதிரொலியின்** அனைத்து இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்களுக்காக...

டிசம்பர் 07 ⇨ நமது ஸ்தாபன ஊழியர்களும் மற்றும் அச்சகப் பணியாளர்களும் சுகபத்திரமாக பாதுகாக்கப்பட...

டிசம்பர் 08 ⇨ **நெகேமியா முழுநேர வேதாகமக் கல்லூரி** மாணவர்களின் உடல்நலத்திற்காக...

டிசம்பர் 09 ⇨ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை சிந்தி, கொங்கணி மற்றும் மணிப்பூரி மொழிகளில் வெளியிடுவதற்காக...

டிசம்பர் 10 ⇨ அலுவலகத்திற்கு தகுதியான புதிய பணியாளர்கள் நியமிக்கபட...

டிசம்பர் 11 ⇨ இளைஞர்களுக்குள் செயல்படுகின்ற தற்கொலையின் ஆவி நீக்கப்பட...

டிசம்பர் 12 ⇨ நமது தலைமைச்சபை மற்றும் கிளைச் சபை உறுப்பினர்களின் தேவைகளுக்காக ...

டிசம்பர் 13 ⇨ இந்த மாதத்தின் தேவைகள் அனைத்தும் கர்த்தரால் சந்திக்கப்பட...

டிசம்பர் 14 ⇨ நமது **அழைப்பின் எதிரொலியின்** பங்காளர்களுக்காக மற்றும் மாநில ஒருங்கிணைப்பாளர்களின் நல்வாழ்வுக்காக...

டிசம்பர் 15 ⇨ நமது ஊழிய விரிவாக்கம் மற்றும் உலகளாவிய சுவிசேஷ பிரபல்யத்திற்காகவும்...

டிசம்பர் 16 ⇨ உலக பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக...

டிசம்பர் 17 ⇨ நமது தலைமைப் போதகரது சுயசரிதை எழுதும் செயல்பாடு நிறைவாய் நிகழ்ந்திட...

டிசம்பர் 18 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் அனைத்து தீய சக்திகளிலிருந்தும் தொடர்ந்து பாதுகாக்க...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

**நீ உடைத்துப்போட்ட முந்தின பலகைகளில் இருந்த வார்த்தைகளை அவைகளில் எழுதுவேன்"** என்றார் யாத்திராகமம் 34:1.

தேவனுடைய வாக்குத்தத்தத்தையோ, பூமிக்குரிய ஆசீர்வாதத்தையோ நீங்கள் உடைத்து போட்டிருப்பீர்களானால் தேவன் அதை திரும்பத் தர தயாராக இருக்கிறார் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். விசுவாசத்துடன் செயல்படுங்கள். தேவன் உங்கள் தேவைகளை நிச்சயம் சந்திப்பார்.

## 3. ஸ்தனங்களின் ஆசீர்வாதம்!

ஸ்தனங்களின் ஆசீர்வாதம் என்பது பிள்ளைகளை வளர்க்கும் தாய். யோசேப்பு பெற்ற ஆசீர்வாதம் ஸ்தனங்களுக்கும், கர்ப்பத்திற்கும் உரிய ஆசீர்வாதமாகும். **சூனேமியாள் ஒரு கனம் மிக்க ஸ்தீரியாயிருந்தாள்** (2 இராஜாக்கள் 4:8). அவள் எப்பொழுதும் தனது தேவ ஊழியர் களுக்குப்



பணிவிடை செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தாள். அவள் அவர்களுக்காகத் தனது வீட்டின் மாடியில் ஓர் சிறு அறையைக் கட்டி அவர்கள் தங்குவதற்கு மட்டுமின்றி அவர்களின் தேவைகளையும் சந்தித்தாள். **"சகல சலக்கரணையோடும் எங்களை விசாரித்து வருகிறாயே, உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்?"** 2 இராஜாக்கள் 4:13. என்ற வசனத்தின் மூலம் அவள் தேவ ஊழியர்களை நன்றாக கவனித்துக் கொண்டாள் என்பது தெரிகிறது. கர்த்தர் தன் சீஷர்களிடம் **"... என் நாமத்தினிமித்தம் உங்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன் தன் பலனை அடையாமற்போவதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"** மாற்கு 9:41 என்றார். நீங்கள் ஊழியர்களின் தேவையை சந்திப்பதை பரலோகம் அங்கீகரிக்கிறது. தேவ ஊழியர்கள் யார்? அவர்கள் உங்கள் ஆத்துமாவுக்காகவும், ஆவிக்குரிய வாழ்க்கைக்காகவும் போராடுபவர்கள். நீங்கள் வாழ்க்கையில் வெற்றிபெற ஜெபிக்கிறவர்கள். உங்களைக் குறித்து பரலோகத்திற்கு அறிவிப்பவர்கள். **கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்.** சங்கீதம் 23:1. மேய்ப்பரின் கையில் இருக்கும் கோலானது மேலிருக்கும் இளந்தளிர்களை ஆடுகளுக்கு கீழே கொடுக்கும். கீழே இருக்கும் புற்களை ஆடுகள் மேய்ந்து விடும்போது எட்டாத இளந்தளிர்களை கொடுப்பது மேய்ப்பரின் கோல்களின் பணியாயிருக்கிறது. அதுவே ஸ்தனங்களுக்குரிய ஆசீர்வாதமாகும். தாய் தன் ஸ்தனங்களிலிருந்து பாலை குழந்தைக்கு கொடுப்பது போல் தேவஊழியர்கள் கர்த்தரிடமிருந்து ஆசீர்வாதங்களை ஜனங்களுக்காக பெற்றுக் கொடுக்கின்றனர். தேவஊழியர்களிடமிருந்து வரும் கர்த்தரின் ஆசீர்வாதமான ஸ்தனங்களின் ஆசீர்வாதத்தை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**"... அன்னாளுக்கோ பிள்ளை இல்லை"** 1 சாமுவேல் 1:2. **"கர்த்தர் அவள் கர்ப்பத்தை அடைத்தபடியினால், ..."** 1 சாமுவேல் 1:6 என்ற வேத வசனத்தின் மூலம் கர்த்தர் அவள் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார் என்பதை நாம் அறிகிறோம். அவள் கர்த்தரிடம் விண்ணப்பம் பண்ணி, கர்த்தாவே உமது அடியாளுக்கு ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக் கொடுப்பேன் என்றாள்.

**(i) கர்ப்பந்தரிப்பது என்றால் தேவதரிசனத்தை ஏற்றுக்கொள்வது** – அது மாத்திரம் முக்கியமல்ல,

**(ii) அதைப் பெற்றெடுக்க வேண்டும்** – தேவ தரிசனத்தைப் பெற்று எடுத்து அதற்கு செயல்வடிவம் கொடுக்க வேண்டும்,

**(iii) வளர்க்க வேண்டும்** – தேவதரிசனத்தை பெற்ற பின் அதை வளர்ப்பதிலும், பயன்படுத்துவதிலும் கவனமாயிருக்க வேண்டும்.

தேவ ஊழியர்கள் பிறந்த குழந்தையை குப்பைத் தொட்டியில் போடும் தாய்மார்கள் போல் இருக்கக் கூடாது. சுவிசேஷத்தின் மூலம் ஒருவரிடத்தில் தேவதரிசனத்தை உருவாக்கி, அவர் அதைப் பெற்றதும் என் கடமை முடிந்தது என விட்டு விடக்கூடாது. அந்த ஆத்துமாவை ஆவியில், வேத வசனத்தில், சத்தியத்தில், வளர்க்க வேண்டும். ஆதியாகமம் 21–ம் அதிகாரத்தில் ஆபிரகாம் தன் பிள்ளை வளர்ந்து, பால் மறந்த பின்னரே பெரிய விருந்து பண்ணினான் என்று உள்ளது. தேவனுடைய சபையில் ஓர் ஆத்துமா தேவதரிசனத்தை கண்டவுடனே, அந்த ஆத்துமா ஆண்டவரிடத்தில் அனைத்தையும் பெற்று, ஆவிக்குரிய சத்தியத்துடன் வளர்ச்சியடையும்படி செயல்பட வேண்டும். ஸ்தனங்களுக்குரிய ஆசீர்வாதத்தை ஜனங்களுக்கு பெற்றுத் தரும் தேவ ஊழியர்கள் தாய் தன் குழந்தைகளைப் பாலூட்டி வளர்ப்பதைப் போல கர்த்தருடைய, பரிசுத்த ஆவிக்குரிய வல்லமையில் உறுதியாக நின்று அதை தேவசபைக்கும், ஜனங்களுக்கும் கொடுத்து வளர்க்க வேண்டும். தேவனுடைய சபை ஊன்றக் கட்டப்படவேண்டும். பாதாளத்தின் வாசல்களால் தேவனுடைய சபையை மேற்கொள்ள முடியாது (மத்தேயு 16:18). தேவமக்கள் தேவனுடைய சபையில் நாட்டப்பட வேண்டும். **தேவனுடைய சபையில் நாட்டப்பட்டவர்கள் தேவனுடையப் பிரகாரங்களில் செழித்திருப்பார்கள்** (சங்கீதம் 92:13).

தொடர்ச்சி 9–ம் பக்கம்.....


# முழுநேர இந்தி வகுப்புகள்
## நெகேமியா வேதாகமக் கல்லூரி, சென்னை.

வேளச்சேரி, சென்னை

போதனா மொழி : இந்தி

Registered Candidate for Membership
Asia Theological Association (ATA)

உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.

Certificate in Theology : ஒரு வருடம்
Diploma in Theology : இரண்டு வருடங்கள்

**கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்**

**உடனே அணுகவும் !**

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்

1. ஜெப உதவி – 24 மணி நேரம்
2. வேதாகமக் கடித முறைக் கல்வி – தமிழ், ஆங்கிலம், இந்தி
3. அழைப்பின் எதிரொலி – பத்திரிகைகள் (16 மொழிகள்) தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒரியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகன்.
4. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் – (இரு இடங்களில்) மாலை நேரம் / முழு நேரம்
5. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்)
7. பயிற்சி வகுப்புகள்
8. சுவிசேஷக் கூட்டங்கள்
9. கைப்பிரதி வினியோகம் – தொடர் ஊழியம்
10. சுவிசேஷ அச்சகம் – சுவிசேஷ பிரசுரங்கள்
11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி
12. சிறுவர் வேத பாடசாலை – ஞாயிறு காலை 8.30 மணி மாலை 4.00 மணி
13. தமிழ் ஆராதனைகள் – ஞாயிறு காலை 8.00 மணி & 10.00 மணி
14. இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 4.00 மணி
15. தெலுங்கு ஆராதனை – ஞாயிறு மாலை 5.00 மணி
16. தமிழ் – ஆங்கிலம் ஆராதனை – ஞாயிறு மாலை 6.00 மணி
17. போதகர் ஆலோசனைக் கூட்டம் – ஞாயிறு மாலை 4.00 மணி
18. பெண்கள் ஆராதனை – புதன் மாலை 5.30 மணி
19. இறையியல் கல்வி – புதன் மாலை 6.30 மணி
20. ஆண்கள் ஆராதனை – வெள்ளி இரவு 7.00 மணி
21. சீஷத்துவக் கூட்டம் – சனி மாலை 6.00 மணி
22. வீட்டுக் கூட்டங்கள் – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி
23. விசேஷ திருவிருந்து – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி
24. ஊழியர்கள் கூடுகை – முதல் சனிக்கிழமை மாலை 5.30 மணி
25. பெற்றோர் ஜெபம் – முதல் ஞாயிறு மாலை 4. 00 மணி
26. இரவு ஜெபம் – 2–ம் வெள்ளி இரவு 9.30 மணி
27. உபவாச ஜெபம் – மூன்றாம் சனிக்கிழமை காலை 9.30 மணி
28. திருவிருந்து – 2–ம் ஞாயிறு ஆராதனைகள்
29. அதிகாலை ஜெபம் – தினமும் காலை 5.00 மணி
30. ஊழியர் ஜெபம் – தினமும் காலை 9.00 மணி
31. அலுவலகம் – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர)

# அழைப்பின் எதிரொலி
## தபால் வழிக் கல்வி
### இந்திய மாணாக்கர்களுக்கு மட்டும்

## I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

## II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின்எதிரொலி
### பத்திரிகையை
### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல் வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!

## வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| Account Name | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| Account Number | : 1023 2923 805 |
| Bank Name | : STATE BANK OF INDIA |
| Branch | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| IFSC Code | : SBIN 0000249 |
| SWIFT Code | : SBI NIN BB 455 |



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## இயேசு போதுமானவர்!

...கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது. சங்கீதம் 34:10.

## GOD IS SUFFICIENT!

1969 – ஆம் ஆண்டில் **அழைப்பின் எதிரொலி** ஊழியங்கள் ஆரம்பித்த பொழுது, நமது பல்வேறு விதமான ஊழியங்களுக்காக பணம் தேவைப்பட்டது. பணியாளர்களின் சம்பளம், அச்சடிக்கும் காகிதம், தபால்தலைகள், தொலைபேசிக் கட்டணம், மின் கட்டணம், கட்டடங்களுக்கான வாடகைகள், போக்குவரத்துச் செலவுகள், ஏழைகளுக்கான உதவிகள் என்று பல காரியங்களுக்குப் பணம் தேவைப்பட்டது.

என் தனி அபிப்பிராயத்தின்படி, எனக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து போதுமானவர். பணம் எதிர்பார்த்து ஒருவருடைய வீட்டுக் கதவையோ, அலுவலகக் கதவையோ நான் தட்டியதில்லை. பண உதவி வேண்டி என் சபை அங்கத்தினரையோ அல்லது நண்பர்களையோ அணுகியதில்லை. ஆனால் இன்று வரை, என்னை அழைத்த தேவன், எல்லா நேரங்களிலும் என் தேவைகளை, அவரது வழியில் அற்புதமாய் சந்தித்து வருகிறார்.

**அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்...** பிரசங்கி 3:11.

தேவைகளும், கஷ்டங்களும் வரும் நேரங்களில், அச்சூழ்நிலைகளை, "நான் சகித்துக் கொள்ள வேண்டிய நேரமாகவும்", "தேவன் என்னை ஜெபிக்கத்தூண்டுகிற நேரமாகவும், ஜெபத்தில் தேவனோடு மேலும் நல்ல உறவை வைத்துக்கொள்ளும் நேரமாகவும்", நான் எடுத்துக்கொள்வது வழக்கம். அத்தகைய அனுபவங்களுக்குப் பின் மிகப்பெரிய அற்புதங்களை நான் அனுபவித்து மகிழ்ந்திருக்கிறேன். நான் அறியாத பலதரப்பட்ட மக்களை எனக்கு உதவும்படி தேவன் எழுப்பிவந்திருக்கிறார். என்னை அறியாத பலர் மூலமாய் என்னையும் என் குடும்பத்தையும் தேவன் பல நேரங்களில் போஷித்திருக்கிறார்!

1975 –ஆம் ஆண்டில், **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை அச்சடித்து வந்த 'பாபுஜி' அச்சகத்திற்கு நான் 300/– ரூபாய் செலுத்த வேண்டியிருந்தது. என் கையில் பணம் இல்லாதிருந்ததால், அதை நான் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டது. ஒரு வியாழக்கிழமை அன்று, 'வருகின்ற திங்கள் அப்பணத்தைச் செலுத்திவிடுவேன்' என்று அதன் மேலாளரிடம் கூறிவிட்டேன். ஆனால் எனக்கோ அதைப் பெறுவதற்கு எவ்வித வருமானமும் இல்லை. தேவனிடத்தில் ஜெபத்தில் அதைக் கூறிவிட்டு, சமாதானமாய் இருந்துவிட்டேன். ஆனாலும், அந்தப் பணத்தை நான் அச்சகத்திற்குச் செலுத்தத் தவறும்பட்சத்தில் அம்மாதம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை அச்சிட்டு வெளியிட இயலாமற்போகும். இதனால் அரசாங்கரீதியில் பல பின்விளைவுகளை நான் சந்திக்க வேண்டியிருக்கும் என்ற கவலை என்னை வாட்டி வதைத்தது. அந்த ஞாயிறு வரை எனக்குத் தேவையான பணம் வரவில்லை. மிகவும் பாரத்துடன் தேவனிடத்தில் ஜெபித்தேன்.

திங்கட்கிழமைக் காலையில், என் தபால்பெட்டியைத் திறந்து பார்த்தபோது, தென்னிந்தியாவின் மதுரைக்கும் தூத்துக்குடிக்கும் இடையில் உள்ள நாகலாபுரம் என்று ஒரு சிறு கிராமத்திலிருந்து ஒரு கவர் வந்திருந்தது. அதில் குறுக்குவரியிடாத (க்ராஸ் செய்யப்படாத) ரூ. 300/– க்கான வரைவோலை (டிமான்ட் டிராப்ட்) இருந்தது. அன்றைய நாளின் தேவைக்கு அப்பணம் போதும். நான் வாக்குக் கொடுத்த வண்ணமாகவே, அந்த அச்சகத்திற்கு நான் செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்த தேவன் எனக்கு உதவி செய்தார். தேவனுக்கே மகிமை!



பல வருடங்களுக்குப் பின், நாகலாபுரம் கிராமத்திற்குச் சென்று அவரை நான் சந்தித்தேன். அவர் ஒரு செருப்பு தைக்கும் ஏழைத் தொழிலாளி என்று அறிந்து ஆச்சரியப்பட்டேன்.

என்னைப் பார்த்ததினால் அவர் மிகவும் சந்தோஷப்பட்டார். அவர், "சார், ஒரு வியாழக்கிழமை அன்று, என்னிடத்தில் அப்போதிருந்த ரூ. 300/– ஐ **அழைப்பின் எதிரொலி ஊழியங்களுக்கு** அனுப்பும்படி யாரோ என் இருதயத்தில் வற்புறுத்திப் பேசியதாக உணர்ந்தேன். எனவே, அத்தொகையை நான் வெள்ளிக்கிழமை உங்களுக்கு அனுப்பினேன். உங்களுக்கு அது திங்கட்கிழமை கிடைத்தது" என்று அவர் கூறினார்.

இவ்வாறு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என் வாழ்வில் அற்புதங்களைச் செய்கிறார். எந்த நிரந்தர உதவிகளும், எங்களுக்கு இல்லாத போதிலும் இவ்வாறு என்னை அறியாத மக்கள் மூலமாய் நமது எல்லா தேவைகளையும் சந்தித்து வருகிறார்.

ஆம், இது ஒரு கடினமான பாதைதான்! தேவனது மகிமையை நான் ஒவ்வொருநாளும் கண்டு வருகிறேன். கர்த்தர் என் மேய்ப்பர். எனக்கு ஒரு குறைவும் இல்லை.

**கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்.** சங்கீதம் 23:1.

**எவன் ஞானமுள்ளவனோ அவன் இவைகளைக் கவனிக்கக்கடவன்.** சங்கீதம் 107:43. ■ ■ ■

... 6-ம் பக்கத் தொடர்ச்சி

## 4. கர்ப்பத்திற்குரிய ஆசீர்வாதம்!

**எலிசா வீட்டிற்குள் வந்தபோது, இதோ, அந்தப் பிள்ளை அவன் கட்டிலின்மேல் செத்துக்கிடந்தான். உள்ளே போய்த் தங்கள் இருவருக்கும் பின்னாக கதவைப் பூட்டி, கர்த்தரை நோக்கிவேண்டுதல்செய்து, கிட்டேபோய், தன் வாய் பிள்ளையின் வாயின்மேலும், தன் கண்கள் அவன் கண்களின்மேலும், தன் உள்ளங்கைகள் அவன் உள்ளங்கைகளின்மேலும் படும்படியாக அவன்மேல் குப்புறப் படுத்துக்கொண்டான்; அப்பொழுது பிள்ளையின் உடல் அனல் கொண்டது. அவன் எழுந்து, அறைவீட்டில் இங்கும் அங்கும் உலாவி, திரும்பக்கிட்டப் போய் அவன்மேல் குப்புறப்படுத்தான்; அப்பொழுது அந்தப் பிள்ளை ஏழுதரம் தும்மித் தன் கண்களைத் திறந்தான்.**

2 இராஜாக்கள் **4:32–35.**

இதுவும் தேவஊழியர்களின் மூலமாக ஜனங்களுக்கு கிடைக்கும் ஆசீர்வாதம்தான். இதில் தாயானவள் கர்ப்ப வேதனையடைநது சந்ததியைப் பெருக்குவது போல தேவஊழியர்கள் ஆண்டவரின் வல்லமையைப் பெற்று செயலாற்றுதல் மூலமாக ஜனங்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்து, அவர்களைப் பெருக செய்து, தேவசபைகளை உருவாக்குகிறார்கள். தேவஊழியர்களின் பங்கு இதில் முக்கியம். தேவஊழியர்கள் ஆண்டரிடமிருந்து வரும் கட்டளையை மறுதலிக்காமல் மக்களுக்கும், தேவசபைக்கும் ஆற்ற வேண்டும்; காக்க வேண்டும்.

ஆண்டவரின் ஊழியத்திற்கான அழைப்பு கிடைக்கும்போது அந்த வாய்ப்பை பின்வாங்காமல் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்துவானவருடைய சீஷன் தோமா, மொழி, கலாச்சாரம் ஏதும் தெரியாமல் ஒரு மனிதராய் இந்தியாவுக்கு வந்தார். தன்னுடைய விசுவாசத்தினால் கர்த்தரின் வல்லமையை வெளிப்படுத்தினார். அவரின் அர்ப்பணிப்புடன் கூடிய சேவையால் கர்த்தரின் மகிமை வெளிப்பட்டது. மந்தை, மந்தையாய் மக்கள் மனந்திரும்பினர். **30** இலட்சம் மக்கள் மனந்திரும்பினர் என்று ஓர் குறிப்பு சொல்கிறது. தற்போது ஆண்டவரின் கருணையால் 7 இலட்சம் பேர் இந்தியாவில் தேவஊழியர்களாக இருக்கின்றனர். இவர்கள் எல்லாரும் சரியாய் செயல்பட்டால் எத்தனை பேர்களை மனந்திரும்ப வைக்க முடியும் என்று பாருங்கள்! அதற்கு முக்கியத் தேவை கர்ப்பத்தின் ஆசீர்வாதம் அல்லவா? ஒரு தாய் கர்ப்பவேதனையுடன் பிரசவிப்பது போல் அர்ப்பணிப்புடன் கூடிய உண்மையான மனதுடன் நாம் தேவனிடம் இருக்கும்போதுதான் ஆண்டவரின் வல்லமையை நாம் பெற்று மக்களை மனந்திரும்ப வைக்கமுடியும்.

2 இராஜாக்கள் **4:18** ம் வசனம் பிள்ளையானவன் அறுப்பறுக்கிறவர்களிடத்திலிருந்த தன் தகப்பனிடம் சென்றான் என கூறுகிறது. பிள்ளை வளர்ந்து தந்தைக்கு பணிபுரிய வேண்டும். அதேபோல் சபைகளோ, தேவஊழியர்களோ, தேவபிள்ளைகளோ வளர்ந்தால் மட்டும் போதாது; செயலாற்ற வேண்டும்.

**தன் தகப்பனைப் பார்த்து: "என் தலை நோகிறது, என் தலை நோகிறது" என்றான்; அப்பொழுது அவன் வேலைக்காரனிடத்தில்: "இவனை இவன் தாயினிடத்தில் எடுத்துக் கொண்டுபோய்விடு" என்றான்.** 2 இராஜாக்கள் **4:19.** பிள்ளைக்கு நோய் வருவதுபோல சபைக்கும், தேவஊழியருக்கும், தேவபிள்ளைகளுக்கும் ஊழியத்திலோ, ஜெபத்திலோ, சபைக்கு வருவதிலோ தடையோ, தாமதமோ, பிரச்சனைகளோ ஏற்படலாம். அப்பொழுது நாம் பேசாமல் இருக்கக் கூடாது. நோயை கவனிக்காமல் விடக்கூடாது. ஏனெனில் பிள்ளை மரித்துப்போய் விடும். அங்கு அப்படித்தான் ஆயிற்று. பிள்ளை தாயின் மடியில் மரித்தான். அதுபோலவே நமக்கு ஆவிக்குரிய மரணமோ அல்லது நம்முடைய ஊழியத்திலோ, ஆவிக்குரிய பணிகளிலோ ஏதாகிலும் பிரச்சனை ஏற்பட்டால் தேவஆலயத்தை நோக்கி ஆண்டவரிடம் வந்துசேர வேண்டும். ஏனினில் தாய்தான் பிள்ளையைக் காப்பாற்றுவாள். தேவ ஆலயத்திற்கு வந்துவிடவேண்டும்; ஆண்டவர் நிச்சயமாகவே நம்மைக் காப்பாற்றுவார். மரித்தோர் ஆண்டவருக்காக எதுவும் செயலாற்ற முடியாது; பிரகாசிக்கவும் முடியாது.

எசேக்கியேல் **47:3–5–**ல் முதலில் ஆயிரமுழம் அளந்து தண்ணீரைக் கடக்கும் போது கணுக்கால் அளவாயிருந்து, பின்னும் அவர் ஆயிரமுழம் அளந்து, கடக்கப் பண்ணின போது முழங்கால் அளவாயிருந்தது. பிறகு மீண்டும் அதேபோல் அளக்க இடுப்பளவாயிருந்தது. பின்னும் அவர் ஆயிரமுழம் அளந்தார். அது கடக்க முடியாத நதியாயிருந்தது. கர்த்தர் அதை முழுவதுமாய் அளக்காமல் கொஞ்ச கொஞ்சமாய் அளப்பதற்கு காரணம் முதலில் கொடுத்த அளவைச் சரியானமுறையில் கடந்த பின்பே அடுத்த அளவு அளந்து கொடுக்கப்படும் என்பதாகும். இதன் மூலம் கர்த்தர் நமக்கு கூறுவது என்னவென்றால் முதலில் நான் கொடுத்த ஆசீர்வாதத்தை சரியான முறையில் பயன்படுத்தி செயலாற்றும்போதே அடுத்த ஆசீர்வாதம் வெளிப்படும் என்பதாகும். நாம் நம் தேவசபையாகட்டும், தேவ ஊழியமாகட்டும் சரியான முறையில், சரியான நேரத்தில் செயலாற்றும்போதே அது ஆண்டவரின் அபரிமிதமான ஆசீர்வாதத்தைப் பெற்று வளர்ச்சியடையும்.

எண்ணாகமம் **16:37,38–**ல் **"அக்கினிக்குள் அகப்பட்ட தூபகலசங்களை எடுத்து, அவைகளிலிருக்கிற அக்கினியை அப்பாலே கொட்டிப்போடும்படி, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் எலெயாசாருக்குச் சொல்: அந்தத் தூபகலசங்கள் பரிசுத்தமாயின. தங்கள் ஆத்துமாக்களுக்கே கேடுண்டாக்கின அந்தப் பாவிகளின் தூபகலசங்களைப் பலிபீடத்தை மூடத்தக்க தட்டையான தகடுகளாய் அடிக்கக் கடவர்கள்; அவர்கள் கர்த்தருடைய சந்நிதியிலே அவைகளைக் கொண்டுவந்ததினால் அவைகள் பரிசுத்தமாயின; அவைகள் இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு அடையாளமாயிருக்கும்" என்றார்.** சபையில் உள்ள பெட்டியோ, குத்துவிளக்கோ, பலிபீடமோ இருக்குமிடத்திலேயே இருக்கும். ஆனால், தூபகலசம் என்பது ஆசாரியர் கையில் இருந்துகொண்டு அவர் போகுமிடமெல்லாம் அதுவும் சுற்றும். தேவையில்லா இடத்தில் தூபக்கலசமானது சிக்கிக் கொண்டது. பரிசுத்த ஸ்தலம் வரையிலும் வரக்கூடிய தூப கலசமானது தற்போது பிரகாரத்தில் முடங்கிவிட்டது. கர்த்தர் அதை எடுத்து பலிபீடத்தை மூடத்தக்கதான தகடாக அடிக்க சொல்லிவிட்டார். நம்முடைய ஆண்டவரின் பரலோகத்தை அடையக்கூடிய ஆவிக்குரிய வளர்ச்சி முழுமையாய் வளராமல் முடங்கிவிடக்கூடாது. ஏதோ குறிப்பிட்ட ஆவிக்குரிய வளர்ச்சி கிடைத்ததும், அத்தோடு நின்றுவிடாமல் ஆண்டவருக்குரிய ஊழியங்களை செய்து பரலோக ராஜ்யத்தை அடையும்படிக்கு வளர்ச்சி அடையவேண்டும்.

2 இராஜாக்கள் **4:21–35–**ல் மரித்துப் போன பிள்ளையை உயிரோடு எழுப்ப கழுதை, வேலைக்காரன், தாய், தேவஊழியர், தேவ மனுஷன் ஆகிய ஐந்து பேர் முயற்சி செய்கின்றனர். இந்த ஐந்து பேரும் யாரென்றால் கர்த்தருக்கு பணியாற்றுகின்ற சுவிசேஷகர், அப்போஸ்தலர், தீர்க்கதரிசி, மேய்ப்பர், போதகர் ஆகியோர்தான். இவர்களே கர்ப்பத்துக்குரிய ஆசீர்வாதத்தை பெற்றுத்தருவதில் முதன்மையானவர்களாக இருக்கின்றனர். தேவமனுஷனாகிய எலிசாவிடம் செல்ல மூன்றுபேர் உதவுகின்றனர். பிறகு நான்காவதாக கேயாசி எனும் ஊழியர் எலிசாவிடமிருந்து பெற்ற கோல் மூலம் பிள்ளையை உயிர்ப்பிக்க முயல்கிறார். அது தோல்வியடையவே கடைசியாக எலிசாவிடம் பிள்ளையைக் கொண்டு செல்கின்றனர்.

**எலிசா வீட்டிற்குள் வந்தபோது, இதோ, அந்தப் பிள்ளை அவன் கட்டிலின்மேல் செத்துக்கிடந்தான். உள்ளே போய்த் தங்கள் இருவருக்கும் பின்னாக அவன் கதவைப் பூட்டி, கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்து, கிட்டேபோய், தன் வாய் பிள்ளையின் வாயின் மேலும், தன் கண்கள் அவன் கண்களின் மேலும், தன் உள்ளங்கைகள் அவன் உள்ளங்கைகளின்மேலும் படும்படியாக அவன்மேல் குப்புறப்படுத்துக்கொண்டான்; அப்பொழுது பிள்ளையின் உடல் அனல்கொண்டது. அவன் எழுந்து, அறைவீட்டில் இங்கும் அங்கும் உலாவி, திரும்பக்கிட்டப் போய் அவன்மேல் குப்புறப் படுத்தான்; அப்பொழுது அந்தப் பிள்ளை ஏழுதரம் தும்மித் தன் கண்களைத் திறந்தான்.**

2 இராஜாக்கள் **4:32–35.**

எலிசா பிள்ளையைக் காப்பாற்ற, பிரசவிக்கும் தாயைப் போல பலமுயற்சிகளை செய்து, அங்கும் இங்கும் உலாவி கர்ப்ப வேதனையோடு பிள்ளையை கடைசியாக உயிர்ப்பிக்கிறார். இதேபோல் கர்த்தருடைய

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/21-23 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/21-23

ஊழியர்களும் மக்களின் ஆவிக்குரிய வாழ்க்கை அழிந்துவிடாமல் கர்ப்ப வேதனையோடு போராட வேண்டும்.

பிள்ளையின் சுவாசத்தை அடைத்திருந்த தூசுக்களையெல்லாம் ஏழுமுறை வந்த தும்மலானது வெளியேற்றி சுவாசம் தடையின்றி செயல்படவழிவகுத்தது போல் நாம் கடும் பிரயாசங்களைப் பொருட்படுத்தாமல் ஆண்டவரின் கர்ப்பத்துக்குரிய ஆசீர்வாதத்தை பெற்று தேவசபையின் ஊழியர்கள், ஜனங்களுக்குக் கொடுக்க வேண்டும்.

************

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

Branch : **Triplicane, Chennai-5**
Name : **S. Sam Selva Raj**
A/C No. : **1023 2934 679**
IFSC : **SBIN 00 00 249**
SWIFT CODE : **SBI NIN BB 455**

### *2. Bank : ICICI Bank*

Branch : **Anna Salai, Chennai-6**
Name : **Echo of His Call**
A/C No. : **6038 0502 2319**
IFSC : **ICIC 000 6038**

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

Branch : **Triplicane, Chennai-5**
Name : **Echo of His Call Educational Trust**
A/C No. : **1023 2923 805**
IFSC : **SBIN 00 00 249**

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**
*****
E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

❊ வருட சந்தா ரூ. 100/– ❊ ஆயுள் சந்தா ரூ. 2000/–

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**
**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**
தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858
**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**
**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

Regd. with the RNI under No. 67380/93
Licenced to post without pre-payment
Postal Regn. No. TN/CH/(C)/197/21-23
Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2021-23
Date of Publication: last week of previous month
Date of Posting : 27th & 28th of previous month
Posted at "Egmore RMS / 1 Patrika Channel"
on 28th OCTOBER 2022
If un-delivered please return to:
ECHO OF HIS CALL (TAMIL)
P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.
Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766

*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by him at **Echo of His Call Printers** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**